# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2015

| பொருளியல் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்குக.
* சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**1.** பின்வரும் கூற்றுகளில் பேரினப் பொருளாதாரத்துக்குரிய பொருத்தமான கூற்று யாது?
(1) சாதாரண பண்டங்களின் விலை அதிகரிக்கும்போது கேள்வித் தொகை வீழ்ச்சியடையும்.
(2) வளப்பற்றாக்குறையானது எந்தவொரு சமூகமும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகும்.
(3) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மூலம் பொருளாதார வளர்ச்சி அளவிடப்படும்.
(4) விலையுறுதியைப் பேணுவதற்கு அரச நிதிக்கொள்கை மிகவும் பொருத்தமானதாகும்.
(5) 2014 ஆம் ஆண்டு இலங்கை பெற்றுக்கொண்ட பொருளாதார வளர்ச்சி போதுமானதாக இல்லை.

**2.** பின்வருவனவற்றுள் மீள் புதுப்பிக்கக் கூடிய வளத்திற்கு உதாரணம்
(1) பயிரிடப்பட்ட நிலம் ஆகும்.
(2) சமுத்திரத்தின் மீன் வளம் ஆகும்.
(3) கனிய எண்ணெய் ஆகும்.
(4) கடற்கரைக்கு அண்மிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும்.
(5) இயந்திர உபகரணங்கள் ஆகும்.

**3.** குறிக்கப்பட்டதொரு பொருளாதாரம் $x$, $y$ ஆகிய இரு பண்டங்களை உற்பத்தி செய்கின்றது. இப்பொருளாதாரம் தொடர்பாக வரையப்பட்ட உற்பத்தி சாத்திய வளையி மூலத்துக்கு குவிவாகக் காணப்பட்டால் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்களில் ஏற்றுக்கொள்ளக் கூடிய கூற்றைத் தெரிவு செய்க.
(1) $x$, $y$ ஆகிய இரு பண்ட உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும் வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்ததாகும்.
(2) $x$ பண்ட உற்பத்தியிலிருந்து $y$ பண்ட உற்பத்திக்கு வளங்களை மாற்றலாம்.
(3) $x$, $y$ பண்டங்களை, அதிகரிக்கும் பயன் விதிக்கு ஏற்ப உற்பத்தி செய்யலாம்.
(4) $x$, $y$ பண்ட உற்பத்தியின் போது ஒன்றுக்கொன்று வேறுபட்ட தொழினுட்பம் பயன்படுத்தப்படும்.
(5) $x$ பண்ட உற்பத்தியில் பயன்படுத்தப்படும் வளங்கள் ல பண்ட உற்பத்திக்கு பயன்படுத்த முடியாது.

**4.** சந்தைப் பொருளாதாரத்தை விட மத்திய திட்டமிடல் பொருளாதாரமொன்றில்
(1) நுகர்வோர் சுதந்திரம் காணப்படும்.
(2) வருமானப்பரம்பலில் சமத்துவம் காணப்படும்.
(3) உற்பத்தியில் வினைத்திறன் காணப்படும்.
(4) போட்டித் தன்மை காணப்படும்.
(5) தனியார் நன்மை கவனத்திற் கொள்ளப்படும்.

**5.** பொருளாதார முறைமையொன்றில் காணக்கூடிய சில இலட்சணங்கள் பின்வருமாறு
A – தனியார் சொத்துரிமை
B – விலைப் பொறிமுறை
C – மத்திய திட்டமிடல்
D – அரச சொத்துரிமை
மேற்குறித்த இலட்சணங்களின்படி **சமவுடமை மத்திய திட்டமிடல் பொருளாதாரமொன்றில்** காணக்கூடிய இலட்சணங்கள்
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும்
(4) B யும் D யும் (5) C யும் D யும்

The National e-learning Portal for The General Education

**6.** பொருளாதார முறைமையொன்றின் செயலாற்றுகையை அளவிடும்போது பயன்படுத்தப்படும் நியதி **அல்லாதது.**
(1) பொருளாதார வளர்ச்சி (2) பொருளாதார உறுதி
(3) பொருளாதாரத்தின வினைத்திறன் (4) வருமானப் பரம்பலின் சமத்துவம்
5) பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தல்.

**7.** X, Y ஆகிய இரண்டு பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்யும் ஒரு எளிய பொருளாதாரம் ஒன்று மூலத்துக்கு குவிவாக அமையும் உற்பத்திசாத்திய எல்லை வளையிக்கு முகங்கொடுக்குமாயின் இவ்விரு பண்டங்களின் வழங்கல் வளையி தொடர்பாக பின்வருவனவற்றுள் எந்த விடை சரியானதாகும்.?

| | X பண்டத்தின் நிரம்பல் வளையி | Y பண்டத்தின் நிரம்பல் வளையி |
|---|---|---|
| (1) | கிடையச்சுக்குச் சமாந்தரமாகும் | கீழிருந்து மேலாக சரியும் |
| (2) | கிடையச்சுக்குச் சமாந்தரமாகும் | கிடையச்சுக்குச் சமாந்தரமாகும் |
| (3) | குத்தச்சுக்குச் சமாந்தரமாகும் | கிடையச்சுக்குச் சமாந்தரமாகும் |
| (4) | கீழிருந்து மேலாக சரியும் | கீழிருந்து மேலாக சரியும் |
| (5) | கீழிருந்து மேலாக சரியும் | கிடையச்சுக்குச் சமாந்தரமாகும் |

**8.** பின்வரும் நிகழ்வுகளுள் கீழ் அரிசியின் விலை அதிகரிப்பதற்கு சரியான காரணம் எது?
(1) உரத்தின் விலை அதிகரித்தமையும் பாணின் விலை குறைந்தமையும்.
(2) உரமானியம் அகற்றப்பட்டமையும் அரிசிக்கான நுகர்வோர் சுவை அதிகரித்தமையும்.
(3) உரமானியம் அதிகரித்தமையும் பாணின் விலை கூடியமையும்.
(4) உரமானியம் அகற்றப்பட்டமையும் அரிசிக்கான நுகர்வோர் சுவை குறைந்தமையும்.
(5) கூடிய விளைவைக் கொடுக்கக்கூடிய உரப்பாவனையும் அரிசிமா இடியப்பத்துக்கான கேள்வி அதிகரித்தமையும்.


**9.** ஒரு நபரின் வருமானமானது 20% அதிகரிக்கும்போது X பண்டத்துக்கான வருமான கேள்வி நெகிழ்ச்சி $-0.6$ஆகும். இந்நிலைமையில் இந்நபர் X பண்டத்தின் கேள்வி அலகினை 1400 இலிருந்து எவ்வளவு அளவால் மாற்றுவான்?
(1) 1568 அலகு வரை உயர்த்துவான். (2) 1388 அலகு வரை குறைப்பான்.
(3) 168 அலகு வரை உயர்த்துவான். (4) 168 அலகால் குறைப்பான்
(5) 840 அலகால் குறைப்பான்.

**10.** கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணியாகவும் நிரம்பல் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணியாகவும் பொதுவாகப் பயன்படுத்தும் காரணி யாது?
(1) பண்டத்திற்கு வருமானத்தில் செலவிடும் சதவீதமாகும்.
(2) பண்டத்தை வரைவிலக்கணப்படுத்தியுள்ள முறை
(3) பண்டம் சமூகத் தேவையுடையதா என்பது
(4) பண்ட உற்பத்தியின்போது காரணி மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல்
(5) பண்டத்தில் விலையில் மாற்றமேற்பட்ட பின் எடுக்கும் காலம்

**11.** சாதாரண கேள்வி, நிரம்பல் நிலைமைகளின் கீழ் ஒரு பண்டம் தொடர்பாக பின்வரும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் கவனத்தில் எடுக்கும்போது சரியான கூற்று எது?
(1) வரி அறவிடுவதனால் மிகை வரிச்சுமை ஒன்று ஏற்படும்.
(2) மானியம் வழங்கும்போது சமூகநலன் உயர்வடையும்.
(3) உச்ச விலை நிர்ணயிக்கும்போது உற்பத்தி மிகை அதிகரிக்கும்.
(4) குறைந்தபட்ச விலை விதிக்கும்போது நுகர்வோர் மிகை அதிகரிக்கும்.
(5) உச்ச விலை விதிக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கறுப்புச் சந்தை விலை ஏற்படும்.

The National e-Learning Portal for The General Education


**12.** X, Y ஆகிய பண்டங்களின் வழங்கல் வளையி பின்வருமாறு




விலை அதிகரிக்கும் போது வழங்கல் நெகிழ்ச்சி மாற்றமடையும் முறையைக் காட்டும் சரியான விடை யாது?

| | *x* பண்டம் | | *y* பண்டம் | |
|---|---|---|---|---|
| | **நெகிழ்ச்சி** | **குணகம்** | **நெகிழ்ச்சி** | **குணகம்** |
| (1) | ஒன்றிற்குக் குறைவு | வீழ்ச்சியடையும் | ஒன்றிற்குக் கூடும் | வீழ்ச்சியடையும் |
| (2) | ஒன்றிற்குக் குறைவு | அதிகரிக்கும் | ஒன்றிற்குக் கூடும் | அதிகரிக்கும் |
| (3) | ஒன்றிற்குக் கூடும் | அதிகரிக்கும் | ஒன்றிற்குக் குறைவு | வீழ்ச்சியடையும் |
| (4) | ஒன்றிற்குக் கூடும் | வீழ்ச்சியடையும் | ஒன்றிற்குக் குறைவு | அதிகரிக்கும் |
| (5) | ஒன்றிற்குக் கூடும் | அதிகரிக்கும் | ஒன்றிற்குக் குறைவு | நிலையாகக் காணப்படும் |

**13.** குறிப்பிட்டவொரு பண்டத்தின் மீது மானியம் வழங்கப்படும் சந்தர்ப்பம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.




The National e-learning Portal for The General Education

மேற்படி சந்தையில் குறிப்பிட்ட பண்டத்துக்கு மானியம் வழங்கினால் நுகர்வோர் மிகையும், சமூக நலனும் மாற்றமடையும் விதம் தொடர்பான சரியான விடை யாது?

| | **நுகர்வோர் மிகை** | **சமூக நலன்** |
|---|---|---|
| (1) | குறைந்துள்ளது. | மாறவில்லை. |
| (2) | கூடியுள்ளது. | குறைந்துள்ளது. |
| (3) | கூடியுள்ளது. | கூடியுள்ளது. |
| (4) | மாறவில்லை. | குறைந்துள்ளது. |
| (5) | கூடியுள்ளது. | மாறவில்லை. |

14. குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் கேள்வி-நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு

$$Qd = 100 \qquad Qs = -50 + 5P$$

இப்பண்டத்தின் மீது 40 ரூபா குறைந்தபட்ச விலை விதித்து, மிகைநிரம்பலை அரசு கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. இக்கொள்கையின்படி மிகை உற்பத்தியும் சமூக நலனிலும் ஏற்படும் பாதிப்பை சரியாகக் காட்டும் விடை யாது?

| | **உற்பத்தி மிகையில் ஏற்படும் மாற்றம்** | **சமூக நலனில் ஏற்படும் மாற்றம்** |
|---|---|---|
| (1) | 1250 ஆல் கூடும். | 2000 ஆல் குறையும். |
| (2) | 1250 ஆல் கூடும். | 500 ஆல் குறையும். |
| (3) | 1000 ஆல் கூடும். | 250ஆல் குறையும். |
| (4) | 1000 ஆல் குறையும். | மாற்றமில்லை |
| (5) | 1250 ஆல் கூடும். | 1750 ஆல் குறையும். |

**15.** உற்பத்தி நிறுவனம் ஒன்றின் குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டில் மொத்த விளைவு உச்சப்படுத்தும்போது எல்லை விளைவு இயங்கும் விதத்தைக் காட்டும் சரியான விடை யாது?

(1) சராசரி விளைவு பூச்சியமாகும்.

(2) எல்லை விளைவு நேர்கணியமாகும்.

(3) எல்லை விளைவு உச்சப்படுத்தப்படும்.

(4) எல்லை விளைவு எதிர்கணியமாகும்.

(5) எல்லை விளைவு குறையும்

**16.** குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் வெளியீடும் செலவும் பற்றிய தரவுகள் பின்வருமாறு.

| **வெளியீடு (அலகு)** **Q** | **மொத்தச் செலவு (ரூ)** **TC** |
|---|---|
| 0 | 100 |
| 1 | 160 |
| 2 | 180 |
| 3 | 190 |
| 4 | 210 |

மேற்படி நிறுவனத்தின சராசரி நிலையான செலவு தொடர்பாக உங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சரியான கூற்று யாது?

(1) வெளியீட்டு அலகு 0 ஆகும் போது சராசரி நிலையான செலவு 0 ஆகும்.


(2) வெளியீட்டு அலகு 2 ஆகும் போது சராசரி நிலையான செலவு50 ஆகும்.

(3) வெளியீட்டு அலகு 4 ஆகும் போது சராசரி நிலையான செலவு 60 ஆகும்.

(4) வெளியீட்டு அலகு 3 ஆகும் போது சராசரி நிலையான செலவு100 ஆகும்.

(5) வெளியீட்டு அலகு 4 ஆகும் போது சராசரி நிலையான செலவு 110 ஆகும்.

**17.** சந்தையில் ஈடுபடும் ஒரு நிறுவனத்தின் மொத்த வருமானம் (TR) மொத்தச் செலவு (TC) வளையிகளது இயல்பு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.




மேலுள்ள தகவல்களின்படி 50 அலகுகள் உற்பத்தி செய்யும்போது கிடைக்கும் மொத்த வருமானத்தையும் சராசரி நிலையான செலவையும் (AFC) சரியாகக் காட்டும் விடை யாது?

| | **மொத்த வருமானம் (TR) (ரூ)** | **சராசரி நிலையான செலவு (AFC) (ரூ)** |
|---|---|---|
| (1) | 1000 | 2 |
| (2) | 1000 | 100 |
| (3) | 500 | 1 |
| (4) | 800 | 2 |
| (5) | 300 | 6 |

[பக் 5 ஐப் பார்க்க

**18.** பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுள் தேசிய கணக்கீடு தயாரிக்கும்போது உள்ளடக்கப்படுவது எது?
(1) வீடமைப்புத் திட்டத்துக்காகக் காணி கொள்வனவு செய்யப்படல்.
(2) தூதுவராலயத்துக்கு அரசாங்கம் காணியை வாடகைக்கு விடல்.
(3) மகாபொல புலமைப்பரிசிலுக்கு அரசு செலவு செய்தல்.
(4) புராதன பெறுமதிமிக்க தொல்பொருளொன்று குடித்தனத்தால் கொள்வனவு செய்யப்படல்.
(5) வதிவோரால் அரசு திறைசேரி உண்டியல் கொள்வனவு செய்தல்.

**19.** தேசிய சேமிப்பைக் காட்டக்கூடிய மிகவும் சரியான முறை யாது?
(1) உள்நாட்டு சேமிப்பு + சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு மீதி
(2) தனியார் சேமிப்பு + அரச சேமிப்பு
(3) மொத்த முதலீடு + சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு மீதி
(4) உள்நாட்டு சேமிப்பு + ஆரம்ப வருமானக் கணக்கு மீதி
(5) செலவிடக்கூடிய மொத்த தேசிய உற்பத்தி − தனியார் நுகர்வு

**20.** குறிப்பிட்டதொரு திறந்த பொருளாதாரத்தில் உள்நாட்டு சேமிப்பு 500 பில்லியன் ரூபாவாகவும் பொருளாதாரத்தில் மொத்த முதலீடு 1000 பில்லியன் ரூபாவாகவும் உள்ளது. இங்கு வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை 400 பில்லியன் ஆகக் காணப்பட்டால் மேற்படி பொருளாதாரத்தில் சென்மதி நிலுவையில் சேவைக் கணக்கு மீதி
(1) 600 பில்லியன் ரூபா ஆகும்.
(2) 500 பில்லியன் ரூபா ஆகும்.
(3) 1100 பில்லியன் ரூபா ஆகும்.
(4) 100 பில்லியன் ரூபா ஆகும்.
(5) −100 பில்லியன் ரூபா ஆகும்.


**21.** திறந்த பொருளாதாரமொன்றில் உண்மைத் தேசிய வருமானத்தைக் காட்டும் சரியான முறை யாது?
(1) (நிலையான விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி) + (ஏற்றுமதி அலகொன்றின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி)
(2) (நிலையான விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி) + (ஏற்றுமதி பெறுமதியின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி)
(3) (நிலையான விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி) + (ஏற்றுமதி பெறுமதியின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி) − (நிலையான விலையில் கணிக்கப்பட்ட ஏற்றுமதிப் பெறுமதி)
(4) (நடைமுறை விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி) ÷ (கவனத்தில் எடுக்கப்படும் ஆண்டின் விலைச்சுட்டெண்) × (நிலையான வருடத்தில் விலைச் சுட்டெண்)
(5) (நிலையான விலையின் கீழ் மொத்தத் தேசிய உற்பத்தி +( பண்ட வர்த்தக மாற்று விகிதம்)

**22.** மூடிய பொருளாதாரமொன்றில் சுதந்திரமான வரியை 100 ரூபாவால் அதிகரித்தால் எல்லா வருமான மட்டத்திலும் சராசரி நுகர்வு நாட்டத்திலும் சராசரி சேமிப்பு நாட்டத்தில் ஏற்படும் விளைவுகளைக் காட்டும் சரியான விடையைத் தெரிக.

| | **சராசரி நுகர்வு நாட்டம்** (APC) | **சராசரி சேமிப்பு நாட்டம்** (APS) |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |
| (2) | குறையும். | குறையும். |
| (3) | அதிகரிக்கும். | குறையும். |
| (4) | குறையும். | அதிகரிக்கும். |
| (5) | மாறாது. | மாறாது. |

**23.** அரச பொருளாதார நடவடிக்கை காணப்படாத எளிய பொருளாதாரமொன்றில் குறிப்பிட்ட ஒரு வருடத்தின் நுகர்வுச் சார்பு $C = 200 + 0.75\ Yd$ ஆகும். அடுத்தவருடத்தில் நுகர்வுச் சார்பு $C = 250 + 0.8\ Yd$ ஆக மாறினால் பொருளாதாரத்தில் சமநிலை வெளியீட்டு மட்டம் கூடுவது
(1) 50 மில்லியன் ரூபாவால்
(2) 250 மில்லியன் ரூபாவால்
(3) 200 மில்லியன் ரூபாவால்
(4) 450 மில்லியன் ரூபாவால்
(5) 500 மில்லியன் ரூபாவால்

**24.** குறிப்பிட்ட ஒரு பொருளாதாரத்தில் மொத்தச் செலவு வளையியானது வலப்பக்கமாக நகரக்கூடிய இருமுறைகள் பின்வருமாறு




மேற்படி E வளையி, $E_1$ வரை அல்லது $E_2$ வரை நகர்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி முறையை சரியான ஒழுங்கில் காட்டும் விடை யாது?

(1) சுதந்திர வரி அதிகரித்தலும் எல்லை சேமிப்பு நாட்டம் குறைவதும்.
(2) சுதந்திர வரி அதிகரித்தலும் எல்லை சேமிப்பு நாட்டம் கூடுவதும்
(3) அரச கொள்வனவு அதிகரித்தலும் எல்லை சேமிப்பு நாட்டம் குறைதலும்.
(4) அரச கொள்வனவு அதிகரித்தலும் எல்லை சேமிப்பு நாட்டம் கூடுதலும்.
(5) முதலீடு அதிகரித்தலும் சராசரி நுகர்வு நாட்டம் கூடுதலும்.

**25.** விலை வீக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் நிரம்பல் பக்கக் காரணி

(1) பணவழங்கல் அதிகரித்தல் ஆகும்.
(2) உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்தல் ஆகும்.
(3) மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் அதிகரித்தல் ஆகும்.
(4) அரச கொள்வனவு அதிகரித்தல் ஆகும்.
(5) தேறிய ஏற்றுமதி அதிகரித்தல் ஆகும்.

**26.** குறிப்பிட்ட பொருளாதாரமொன்றில் பண நிரம்பல் 5000 பில்லியன் ரூபா எனவும் பணச் சுற்றோட்ட வேகம் 10 எனவும் தேறிய தேசிய உற்பத்தி 400 பில்லியன் எனவும் கருதினால் இப்பொருளாதாரத்தின் விலைமட்டத்தின் பெறுமதி யாது?

(1) 40 ஆகும். (2) 50 ஆகும். (3) 125 ஆகும்.
(4) 400 ஆகும். (5) 500 ஆகும்.

**27.** வணிக வங்கிகளில் ஆரம்ப ஒதுக்குகளில் அடங்குபவற்றை மட்டும் பின்வரும் விடைகளில் இருந்து தெரிவு செய்க.

(1) திறைசேரி உண்டியல், கையிலுள்ள காசு, மத்தியவங்கியிலுள்ள ஒதுக்கு
(2) மத்தியவங்கியிலுள்ள ஒதுக்கு, திறைசேரி உண்டியல், கழிவு செய்யப்பட்ட உண்டியல்
(3) வெளிநாட்டு வங்கிகளில் இருந்து அறவிட வேண்டிய காசு மீதி, மத்தியவங்கியிலுள்ள ஒதுக்கு, கையிலுள்ள காசு
(4) முதலீடு, உள்நாட்டு வங்கிகளில் இருந்து வரவேண்டிய காசு மீதி, கழிவு செய்யப்பட்ட உண்டியல்
(5) திறைசேரி உண்டியல், முதலீடு, கழிவு செய்யப்பட்ட உண்டியல்

**28.** தனியுரிமை வங்கியொன்றில் குறிப்பிட்ட ஒரு நபர் 16000 ரூபாவை வைப்பிலிட்டார். சட்டமுறை ஒதுக்குவீதம் 20% ஆகக் காணப்பட்டால் இந்த வைப்பை அடிப்படையாகக் கொண்டு வங்கி புதிதாக உருவாக்கக் கூடிய உச்ச வைப்புத் தொகை யாது?

(1) 3200 ஆகும். (2) 12800 ஆகும். (3) 64000 ஆகும்.
(4) 80000 ஆகும். (5) 96000 ஆகும்.

**29.** ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படும்போது கொடுக்கப்பட்ட காலத்துக்குள் காசு இருப்பு குறைவதற்கான காரணம் யாது?

(1) மத்திய வங்கி மீள்கொடுப்பனவு ஒப்பந்தங்களை மேற்கொள்வதாகும்.
(2) வங்கிக் கடனுக்கு பொதுமக்கள் கேள்வி அதிகரித்தலாகும்.
(3) அரசு பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியீட்டுவதற்கு வணிகவங்கிகளிடம் இருந்து கடன் பெறுவதாகும்.
(4) பணச்சுற்றோட்ட வேகம் குறைவதாகும்.
(5) மத்திய வங்கி சட்டமுறை ஒதுக்கு விகிதத்தைக் குறைப்பதாகும்.

The National e-learning Portal for The General Education

**30.** மத்திய வங்கியின் குறிக்கோளில் ஒன்றான நிதியியல் முறையின் உறுதித் தன்மையைப் பேணுவதற்கு பின்வரும் கருமங்களில் எது சிறப்பாக ஆற்றப்படுகின்றது?

(1) நிதிக்கொள்கையை அமுல்படுத்தல்.
(2) செலாவணிக் கொள்கையை அமுல்படுத்தல்.
(3) நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்தல் நெறிப்படுத்தல்
(4) உத்தியோக பூர்வ வெளிநாட்டு ஒதுக்கு வீதத்தை முகாமை செய்தல்.
(5) அரச கடன் முகாமைத்துவம்


**31.** குறிப்பிட்ட ஒரு பொருளாதாரத்தில் மனித தேவையைப் பூர்த்தி செய்யும் பண்டங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

A – வீதிச் சமிக்ஞை
B – அதிவேகப் பாதை
C – பொதுப் போக்குவரத்துச் சேவை
D – அறிவு

மேற்குறித்தவற்றுள் பொதுப் பொருள்

(1) A யும் B யும். (2) A யும் Cயும். (3) A யும் D யும். (4) B யும் C யும். (5) B யும் D யும்

**32.**




MPC = தனியார் எல்லைச் செலவு
MPB = தனியார் எல்லைப் பயன்
MSB = சமூக எல்லைப் பயன்

மேலுள்ள வரைபடத்தில் காட்டப்படுவது,

(1) சமூக அடிப்படையில் மிகச் சிறப்பு வாய்ந்த வெளியீட்டை A புள்ளி காட்டுவதாகும்.
(2) நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி காணப்படும் நிலையாகும்.
(3) உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி காணப்படும் நிலையாகும்.
(4) நுகர்வில் நேர்கணிய வெளிவாரி காணப்படுவதாகும்.
(5) நுகர்வில் நேர்கணிய வெளிவாரி காணப்படும்.

The National e-learning Portal for The General Education

**33.** பின்வருவனவற்றுள் எக்காரணியினால் அரச தோல்வி ஏற்படலாம்?

(1) வெளிவாரி உருவாகல்
(2) சந்தையில் இருப்பில் எதிர்பாராத பற்றாக்குறை ஏற்படல்.
(3) வளப் பகிர்வில் வினைத்திறனின்மை ஏற்படல்
(4) பொதுவளங்களின் மிகை நுகர்வு
(5) அரசியல் சுயநன்மை

**34.** விரிவாக்க அரச நிதிக்கொள்கையின் பிரதான பண்பு எது?

(1) பாதீட்டுப் பற்றாக்குறையை பூச்சிய மட்டத்தில் பேணல்
(2) பணநிரம்பலை விரிவுபடுத்துவதற்கு ஏற்றவாறு நிதிக்கொள்கையைப் பயன்படுத்தல்.
(3) வரிகளை விட அரச செலவுகள் அதிகரிக்கும் வகையில் தொழிற்படல்.
(4) அரச செலவை விட வரியை அதிகரிக்கக் கூடிய வகையில் தொழிற்படல்
(5) மிகை பாதீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.


**35.**

| வருமான மட்டம் | வரி (A) | வரி(B) | வரி (C) |
|---|---|---|---|
| 500000 | 50000 | 75000 | 7500 |
| 1000000 | 100000 | 100000 | 100000 |
| 1500000 | 150000 | 100000 | 225000 |

அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி விருத்தி முறை வரிக்கு உதாரணம்.

(1) A மாத்திரம் (2) A யும் B யும் (3) A யும் C யும்
(4) C மாத்திரம் (5) B யும் C யும்

**36.**




மேலுள்ள வரைபடங்களின்படி இருநாடுகளினதும் சர்வதேச வர்த்தகம் தொடர்பாக மிகச் சரியான கூற்று

(1) $x$ நாடு தேயிலையில் சிறக்குமியல்பு மூலம் நன்மை அடையலாம்.
(2) $y$ நாடு தேயிலையில் சிறக்குமியல்பு மூலம் நன்மை அடையலாம்.
(3) ஓரலகு தேயிலையை ஏற்றுமதி செய்து 0.5 ஆடையை அதிகமாகவும் 2 இற்குக் குறைவாக இறக்குமதி செய்வதன் மூலம் நன்மையடையலாம்.
(4) ஓரலகு ஆடையை ஏற்றுமதி செய்து 0.5 தேயிலையை அதிகமாகவும் 2இற்குக் குறைவாக இறக்குமதி செய்வதன் மூலமும் நன்மையடையலாம்.
(5) சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் இரு நாடுகளும் நன்மை அடைய முடியாது.

**37.** தற்போது இலங்கையின் இறக்குமதியில் கூடிய சதவீதத்தைப் பெறும் நாடு,

(1) சீனா (2) ஐக்கிய அமெரிக்கா (3) ஜப்பான்.
(4) இந்தியா (5) ஐக்கிய இராச்சியம்

**38.** இலங்கை வெளிநாடுகளுடன் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – உள்நாட்டு முதலீட்டாளர்கள் வெளிநாடுகளில் இருந்து பங்கிலாபத்தைப் பெறல்.
B – வெளிநாடுகளில் உழைக்கும் இலங்கையர் இந்நாட்டுக்குப் பணம் அனுப்புதல்.
C – வெளிநாட்டிலிருந்து பெறும் கடன்களுக்கு அரசு வட்டி செலுத்துதல்
D – இலங்கை அரசுக்கு அமெரிக்கா அரசினால் கோதுமைமா நன்கொடை கிடைத்தல்.

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல் சென்மதி நிலுவையில் உள்ளடக்கப்படும் சரியான விடை எது?

| | ஆரம்பநிலை வருமானக் கணக்கு | இடைநிலை வருமானக் கணக்கு |
|---|---|---|
| (1) | A யும் B யும் | C யும் D யும் |
| (2) | C யும் D யும் | A யும் B யும் |
| (3) | A யும் D யும் | D யும் C யும் |
| (4) | B யும் D யும் | A யும் C யும் |
| (5) | A யும் C யும் | B யும் D யும் |

**39.** இலங்கையில் குறிப்பிட்ட ஒரு கூடைப்பொருளைக் கொள்வனவு செய்ய 600 ரூபா. செலவிடப்படுவதுடன் அக்கூடைப் பொருளை அமெரிக்காவில் கொள்வனவு செய்ய 8 டொலர் செலவாகும் எனின், கொள்வனவுச் சக்தி சமமதிப்பு நாணயமாற்று வீதம் ஒரு டொலருக்கு ரூபா,

(1) 50 ஆகும். (2) 75 ஆகும். (3) 80 ஆகும். (4) 150 ஆகும். (5) 160 ஆகும்.

**40.** இலங்கையின் நாணய மாற்றுவீதம் 1 ரூபா = 1 / 120 டொலர் ஆகக் காணப்படும் நிலையில் உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி 20% மதிப்பிறக்கம் செய்யப்பட்டால் நாணய மாற்று வீதம் ஒரு டொலருக்கான ரூபா.

(1) 100 ஆகும். (2) 125 ஆகும். (3) 140 ஆகும்.
(4) 150 ஆகும். (5) 160 ஆகும்.

**41.** கடந்த இரு பத்தாண்டுகளில் இலங்கையின் பொருளாதாரத்தில் குறைந்த பொருளாதார வளர்ச்சியையும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியையும் காட்டும் ஆண்டுகள் முறையே,

(1) 2001 உம் 2011 உம் ஆகும். (2) 2004 உம் 2009 உம் ஆகும்.
(3) 2005 உம் 2010 உம் ஆகும். (4) 2003 உம் 2012 உம் ஆகும்.
(5) 2002 உம் 2013 உம் ஆகும்.

The National e-learning Portal for The General Education

[பக் 9 ஐப் பார்க்க

**42.** கருதுகோள் அடிப்படையிலான ஒரு பொருளாதாரம் தொடர்பான தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. (அனைத்தும் மில்லியன் ரூபாவில்)

| ஆண்டு | நிலையான விலையில் மொ.உ.உ. | வேலையின்மையின் சனத்தொகை | வேலை வாய்ப்பு | வேலை செய்யக்கூடிய வயதிலுள்ள சனத்தொகை |
|---|---|---|---|---|
| 2012 | 2000 | 5 | 15 | 40 |
| 2013 | 2100 | 5 | 20 | 50 |

மேற்குறித்த தகவல்களின் படி 2013 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி வீதம், வேலைவாய்ப்பு வீதம், தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் என்பனவற்றைச் சரியாகக் காட்டும் விடை யாது?

| பொருளாதார வளர்ச்சி வீதம் (%) | வேலை வாய்ப்பு வீதம் (%) | தொழிற்படையில் பங்கு பங்குகொள்ளல் வீதம் (%) |
|---|---|---|
| (1) 10 | 40 | 40 |
| (2) 5 | 80 | 50 |
| (3) 100 | 5 | 40 |
| (4) 5 | 10 | 50 |
| (5) 21 | 20 | 10 |

**43.** உலக வங்கி அறிக்கையின் படி குடித்தொகைசார் அனுகூலம் ஒரு நாட்டிற்கு உரித்தாவதற்கு அந்நாட்டின் சிறுவர் சனத்தொகை வீதத்திலும் முதியோர் சனத்தொகையின் வீதத்திலும் காணப்பட வேண்டிய வரையறைகளை சரியாகக் காட்டும் விடை எது?

| | சிறுவர் சனத்தொகையின் சதவீதம் | முதியோர் சனத்தொகையின் சதவீதம் |
|---|---|---|
| (1) | 30 இலும் குறைதல் | 15 இலும் குறைதல் |
| (2) | 15 இலும் குறைதல் | 30 இலும் குறைதல் |
| (3) | 40 இலும் குறைதல் | 20 இலும் குறைதல் |
| (4) | 20 இலும் குறைதல் | 40 இலும் குறைதல் |
| (5) | 10 இலும் குறைதல் | 5 இலும் குறைதல் |

**44.** இலங்கைப் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பு தொடர்பான சரியான கூற்று

(1) சேவைத் துறைக்கு சார்பாக கைத்தொழில் துறையில் வேலைவாய்ப்பு வீதம் கூடிய பெறுமதியைக் கொண்டுள்ளது.

(2) தனியார் துறையின் வேலைவாய்ப்பு வீதத்துக்குச் சார்பாக அரச துறையில் வேலைவாய்ப்பு உயர்வாக உள்ளது.

(3) உயர்வு வேலை வாய்ப்பு வீதம் 40 வயதுக்குக் கூடிய வயதுத் தொகுதியினரில் காணப்படுகின்றது.

(4) உயர் வேலைவாய்ப்பு வீதம் பட்டதாரிகளுக்கிடையிலே காணப்படுகிறது.


(5) பெண்களின் வேலைவாய்ப்பு வீதம் ஆண்களின் வேலை வாய்ப்பு வீதத்தை விட கூடிய பெறுமதியுடையதாக உள்ளது.

**45.** 2014 மானிட அபிவிருத்தி அறிக்கையின் படி உயர் மானிட அபிவிருத்தியுள்ள நாடும் குறைந்த அபிவிருத்தியுள்ள நாடும் இலங்கைக்குக் கிடைத்துள்ள நிலையும் முறையே

| | உயர்ந்த நாடு | குறைந்த நாடு | இலங்கைக்குக் கிடைத்துள்ள நிலை |
|---|---|---|---|
| (1) | அவுஸ்திரேலியா | சாட் | 92 |
| (2) | சுவிட்சர்லாந்து | கொங்கோ | 93 |
| (3) | ஐக்கிய இராச்சியம் | நைகர் | 92 |
| (4) | நோர்வே | நைகர் | 73 |
| (5) | சுவிட்சர்லாந்து | சாட் | 73 |

[பக் 10 ஐப் பார்க்க

**46.** A,B ஆகிய இரு நாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட லோரன்ஸ் வளையி பின்வரும் வரைபு மூலம் காட்டப்பட்டுள்ளது.




A, B ஆகிய நாடுகளின் லோறன்ஸ் வளையி மூலம் நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய கூற்றைத் தெரிவு செய்க.

(1) A நாட்டை விட B நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் B நாட்டின் கினிக்குணகம் A நாட்டை விடக் குறைவாகும்.

(2) B நாட்டை விட A நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் A நாட்டின் கினிக்குணகம் B நாட்டை விடக் குறைவாகும்.

(3) A நாட்டை விட B நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் B நாட்டின் கினிக்குணகம் A நாட்டை விட அதிகமாகும்.

(4) B நாட்டை விட A நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் A நாட்டின் கினிக்குணகம் B நாட்டை விட அதிகமாகும்.

(5) A நாட்டை விட B நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் இரு நாடுகளினதும் கினிக்குணகம் பற்றித் தீர்மானத்துக்கு முடியாது.

**47.** பல்பரிமாண வறுமைச் சுட்டி பின்வரும் எக்காரணிகள் இரண்டினதும் குணகமாகும்.

(1) சனத்தொகை வறுமைச்சுட்டியும் வளங்கள் மக்களுக்குக் கிடைக்கவேண்டியவற்றை தாமதப்படுத்தும் குறிகாட்டியும்

(2) சனத்தொகை வறுமைச்சுட்டியும் பல்பரிமாண வறுமைக்கு ஆளான சனத்தொகையும்.

(3) சனத்தொகை வறுமைச்சுட்டியும் வறுமை இடைநிலைச் சுட்டியும்

(4) வறுமை இடைநிலைச் சுட்டியும் வளங்கள் மக்களுக்குக் கிடைக்கவேண்டியவற்றை தாமதப்படுத்தும் குறிகாட்டியும்

(5) வளங்கள் மக்களுக்குக் கிடைக்கவேண்டியவற்றைதாமதப்படுத்தும் குறிகாட்டியும் பல்பரிமாண வறுமைக்கு ஆளான சனத்தொகையும்

The National e-learning Portal for the General Education

**48.** 2012 / 2013 ஆண்டு நடாத்தப்பட்ட குடித்தன வருமானமும் செலவும் பற்றிய ஆய்வின்படி இலங்கையில் வறுமை குறைந்த, கூடிய மாவட்டங்கள் எவை?

| | குறைந்த மாவட்டம் | கூடிய மாவட்டம் |
|---|---|---|
| (1) | கொழும்பு | மட்டக்களப்பு |
| (2) | கம்பஹ | மொனராகலை |
| (3) | கொழும்பு | முல்லைத்தீவு |
| (4) | கம்பஹ | மட்டக்களப்பு |
| (5) | கொழும்பு | மொனராகலை |

**49.** இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தியின்பால் திசைமுகப்படுத்தும்போது பல்வேறு பொருளாதாரச் சக்திகளைப் பயன்படுத்தத் திட்டமிட்ட முக்கூட்டு A பொருளாதாரத்தைச் (Tripple A Economy) சரியாகக் காட்டும் விடை யாது?

(1) விவசாயத்துறை, மீன்வளர்புத்துறை (aquaculture) , விலங்கு வேளாண்மை

(2) விவசாயத்துறை, உற்பத்திக் கைத்தொழில், அகழ்வுக் கைத்தொழில்

(3) விவசாயத்துறை, காட்டுத்துறை, அரிமரக் கைத்தொழில்

(4) சுற்றுலாத்துறை, விமான, கடற்துறை

(5) வலுச்சக்தி, கடற்துறை, அறிவு மையம்.

**50.** ஒப்பீட்டளவில் 2012 விட 2013 இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைரீதியான அபிவிருத்தி யாது?

| | விவசாயத்துறையின் வளர்ச்சி வீதம் | கைத்தொழில்த் துறையின் வளர்ச்சி வீதம் | சேவைத்துறையின் வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| (1) | 10.8 | 31.1 | 58.1 |
| (2) | 4.7 | 9.9 | 6.4 |
| (3) | 7.2 | 41.5 | 51.3 |
| (4) | 11.3 | 30.4 | 58.6 |
| (5) | 4.7 | 6.4 | 9.9 |

# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2015

| பொருளியல் II | மூன்று மணித்தியாலம் |
|---|---|

**கவனிக்குக :**

* **ஒரு பகுதியிலிருந்து** குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) பொருளாதார வளம், பொருளாதாரமல்லாத வளம் என்ற எண்ணக்கருக்களை உதாரணங்கள் மூலம் விளக்குக. **(04 புள்ளிகள்)**

(ii) மாற்றுப் பொருளாதார முறைகளின் கீழ் வள உரிமையின் பல்தன்மை காணப்படுகின்றது என்பதைக் காட்டுக. **(04 புள்ளிகள்)**

(iii) மாற்றுப் பயன்பாட்டிடையே வளப்பகிர்வின்போது விலைப்பொறிமுறையின் கடப்பாட்டினை தெளிவுபடுத்துக. **(04 புள்ளிகள்)**

(iv) சந்தர்ப்பச் செலவுடன் அல்லது சந்தர்ப்பச் செலவின்றி வளங்களை உற்பத்திச் செயற்பாட்டில் பயன்படுத்த முடியுமா? பொருத்தமான வரைபடமொன்றின் உதவியுடன் உமது விடையை நிறுவுக. **(04 புள்ளிகள்)**

(v) பொருளாதாரத்தின் வினைத்திறனை ஏற்படுத்துவதற்கான ஒரேயொரு நிபந்தனை உற்பத்தியின் வினைத்திறனாகும். இக்கூற்றின் உண்மைத் தன்மையை விளக்குக. **(04 புள்ளிகள்)**

**2.** (i) “சந்தைக் கேள்வியானது தனியார் கேள்வியின் மூலம் கட்டியெழுப்பப்படுகின்றது” இக்கூற்றை விளக்குக. **(02 புள்ளிகள்)**

(ii) கேள்வித்தொகை குறித்த பொருள் விலையில் எதிர்கணியச் சார்பை ஏற்படுத்துவது ஏன்? **(02 புள்ளிகள்)**

(iii) இடமிருந்து வலமாக கீழ் நோக்கிச் சரிந்து செல்லும் எளிய கேள்விக் கோட்டின் வழியே விலைக் கேள்வி நெகிழ்ச்சி மாறும் விதத்தையும் மொத்தச் செலவு மாறும் விதத்தையும் வரைபடம் மூலம் விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iv) பல்வேறு பண்டங்களில் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவதற்கான காரணிகளை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(v) பின்வருவன குறிப்பிட்ட ஒரு பண்டத்தில் கேள்வி நிரம்பல் தொடர்பான தகவல்கள் ஆகும்.

| **விலை ரூபா.** | **கேள்வித்தொகை (அலகு)** | **நிரம்பல் தொகை (அலகு)** |
|---|---|---|
| 16 | 120 | 40 |
| 20 | 100 | 60 |

(அ) மேலுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சமன்பாட்டினை அமைக்குக. **(02 புள்ளிகள்)**

(ஆ) கேள்வி, நிரம்பல் சமன்பாட்டின் உதவியுடன் சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றைக் கணிக்குக. **(02 புள்ளிகள்)**

(இ) இப்பண்டத்தில் ஓரலகிற்கு 10 ரூபா மானியம் வழங்கப்பட்டால் அரச செலவும் நுகர்வோர் பயனும் எவ்வாறு மாற்றமடையும் என்பதைச் சமன்பாட்டைப் பயன்படுத்தித் தீர்க்குக. **(04 புள்ளிகள்)**

[பக்.2 ஐப் பார்க்க.

**3.** (i) கணக்கியல் இலாபம், பொருளியல் இலாபம் சாதாரண இலாபம் எனும் எண்ணக்கருக்களை விளக்குக. **(06 புள்ளிகள்)**

(ii) குறைந்து செல்லும் விளைவு விதி, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி என்பன உற்பத்தி நிறுவனத்தின் செலவில் செல்வாக்குச் செலுத்தும் முறையைக் காட்டவும். **(04 புள்ளிகள்)**

(iii) அளவுத்திட்ட சிக்கனம் என்றால் என்ன? அது எக்காரணத்தினால் ஏற்படுகின்றது? **(04 புள்ளிகள்)**

(iv) நிறைபோட்டி நிறுவனம் ஒன்று குறுங்காலத்தில் உற்பத்தியில் ஈடுபடுவதற்குத் தேவையான குறைந்தபட்ச விலை எது என்பதை வரைபடம் மூலம் விளக்குக. **(04 புள்ளிகள்)**

(v) சந்தையில் போட்டி தோன்றுவதற்கு ஏதுவான காரணி எது என்பதை விளக்குக. **(02 புள்ளிகள்)**

**4.** (i) குறிப்பிட்டதொரு பொருளாதாரம் தொடர்பான கருதுகோள் ரீதியான தரவுகள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன. (எல்லாம் மில்லியன் ரூபாக்களில்)

| | |
|---|---|
| உள்நாட்டு சேமிப்பு ................................................. | 400 |
| வாடகை ................................................................ | 250 |
| மொத்த நுகர்வு .................................................... | 800 |
| சம்பளமும் சுயதொழில் வருமானமும் ..................... | 400 |
| தேறிய நேரில் வரி................................................... | 150 |
| கம்பனி இலாபம் ................................................ | 150 |
| வட்டி வருமானம் ................................................. | 150 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிக்குக.

(ஆ) சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி

(ஆ) தேறிய உள்நாட்டு வருமானம்

(இ) மூலதனத் தேய்வு **(2 x 03 புள்ளிகள்)**

(ii) ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அந்நாட்டின் மொத்த உள்நாட்டுச் செலவுக்கு கட்டாயம் சமமாகுமா?
உமது விடைக்கான காரணம் தருக. **(04 புள்ளிகள்)**

(iii) தேசிய கணக்கீட்டைத் தயாரிக்கும்போது சில பயன்தரும் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய கணக்கீட்டில் உள்வாங்கப்படுவதில்லை." காரணம் தருக. **(04 புள்ளிகள்)**

(iv) தேசிய கணக்கீட்டின் முக்கியத்துவத்தை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(v) தேசிய கணக்கீட்டில் கூட்டப்பட்ட பெறுமதியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் யாவை? **(02 புள்ளிகள்)**

**5.** (i) எளிய மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் எல்லை நுகர்வு நாட்டத்தில் பெறுமதி 1 இற்கு குறைவாக அமைவது ஏன்? **(02 புள்ளிகள்)**

(ii) திறந்த பொருளாதாரமொன்றில் மொத்தக் கேள்வி வளையியை இடது பக்கம் நகரச் செய்யக்கூடிய காரணிகள் யாவை? **(04 புள்ளிகள்)**

The National e-learning Portal for the General Education

[பக்.3 ஐப் பார்க்க.

(iii) கருதுகோள் ரீதியான நுகர்வு வளையியின் இரு புள்ளிகள் பின்வருமாறு

| செலவிடத்தக்க வருமானம் (Yc) | நுகர்வு (C) |
|---|---|
| 1000 | 1250 |

இப்பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன..

மொத்த முதலீட்டுச் செலவு (I) = 300
அரச செலவு (G) = 100
அரச வரி (T) = 100

(அ) நுகர்வுச் சமன்பாட்டை அமைக்குக. **(02 புள்ளிகள்)**

(ஆ) சமநிலை வருமான மட்டத்தின் பெறுமதி எவ்வளவு? **(02 புள்ளிகள்)**

(இ) சமநிலை வருமானத்தில் வெளிப்பாய்ச்சல்களுக்கு உட்பாய்ச்சல்கள் சமப்படும் என்பதைக் காட்டுக. **(02 புள்ளிகள்)**

(ஈ) மொத்தச் செலவு வளையியை வரைபடத்தில் காட்டி சமநிலை வெளியீட்டு மட்டத்தைக் காட்டுக **(04 புள்ளிகள்)**

(iv) வேலையின்மை காணப்படும் ஒரு பொருளாதாரத்தில் தேசிய வருமானத்தில் சமநிலை ஏற்பட முடியும் என்பதை வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. **(04 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

## பகுதி II

**6.** (i) ஒரு நாட்டு மக்கள் எக்காரணத்திற்கு தம்வசம் உள்ள பணத்தை தம்மிடம் வைத்திருக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்? **(03 புள்ளிகள்)**

(ii) குறிப்பிட்ட ஒரு நாட்டின் பண நிரம்பல் எக்காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது? **(04 புள்ளிகள்)**

(iii) சட்டரீதியான ஒதுக்கு 10% ஆக காணப்படும் வணிகவங்கி முறையில் செயற்படும் குறிப்பிட்ட ஒரு வணிக வங்கியின் ஐந்தொகை பின்வருமாறு

| பொறுப்புக்கள் (ரூபாவில்) | | சொத்துக்கள் (ரூபாவில்) | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 2000 | ஒதுக்கு | 250 |
| | | கடன் | 1750 |
| | 2000 | | 2000 |

(அ) மேற்படி வங்கி புதிதாகக் கடன் கொடுக்கக் கூடிய அளவு என்ன? **(02 புள்ளிகள்)**

(ஆ) புதிய கடன் வழங்கலுடன் வங்கியின் ஐந்தொகையைத் தயாரிக்குக. **(02 புள்ளிகள்)**

(iv) மத்திய வங்கியின் குறிக்கோள்களுக்கும் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பினைப் பரிசீலிக்க. **(04 புள்ளிகள்)**

(v) (அ) பணவீக்கம், பணச் சுருக்கம் எனும் எண்ணக்கருக்களை விளக்குக. **(02 புள்ளிகள்)**

(ஆ) மேற்குறித்த நிலைமைகளை அளவிடுவதற்கு இலங்கையில் தயாரித்துள்ள அட்டவணைகள் யாவை? **(03 புள்ளிகள்)**

[பக்.4 ஐப் பார்க்க.

**7.** (i) அரச நிதி முகாமைத்துவத்தில் கேள்வி ரீதியான கொள்கை எச்சந்தர்ப்பங்களிலி சில வரையறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் எடுக்கக் கூடிய மாற்று முறைகள் யாவை என்பதை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(ii) வரித்தளம் என்பதை விளக்கி வரித்தளத்தை வகைப்படுத்தக் கூடிய முறையை உதாரணம் மூலம் விபரிக்குக. **(04 புள்ளிகள்)**

(iii) "இலங்கையில் அரச செலவுகளை பல்வேறு நியதிகளின் கீழ் வகைப்படுத்தலாம்" இக்கூற்றை விபரிக்குக. **(04 புள்ளிகள்)**

(iv) கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | (ரூபா. மில்லியன்) |
|---|---|
| வருமானம் | = 10 000 |
| நன்கொடை | = 2 000 |
| மொத்தக் கொடுப்பனவு | = 15 000 |
| கடன் மீள் கொடுப்பனவு | = 1 000 |

(அ) மேற்குறித்த தரவுகளைப் பயன்படுத்தி வரவு செலவுத் திட்டத்தின் மொத்த நிலுவையைக் கணிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) இத்தகவல்களின்படி குறிப்பிட்ட பொருளாதாரத்தின் தேறிய நிதிப்பற்றாக்குறை எவ்வளவு? **(02 புள்ளிகள்)**

(v) இலங்கையின் அரச கடனின் அளவில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றம் பற்றி யாது கூறுவீர்? அதன் விளைவுகள் யாவை? **(04 புள்ளிகள்)**

**8.** (i) பின்வரும் ஒவ்வொரு நாட்டிலும் ஓரலகு ஊழியத்தினால் உற்பத்தி செய்யக்கூடிய வெளியீட்டின் அளவு காட்டப்பட்டுள்ளது.

| | **நியூசிலாந்து** | **அவுஸ்திரேலியா** |
|---|---|---|
| பால்மா பக்கெட் | 20 | 100 |
| தகரத்தில் அடைத்த மீன் | 40 | 50 |

மேற்குறித்த அட்டவணைப்படி,

(அ) ஒவ்வொரு பொருட்கள் தொடர்பாகவும் முழுநன்மை காணப்படும் நாடு எது?

(ஆ) ஒவ்வொரு நாடும் சிறப்புத்தேர்ச்சி அடையக்கூடிய பண்டங்கள் எவை?

(இ) ஒவ்வொரு நாட்டினதும் உள்நாட்டு பரிமாற்று வீதத்தைக் காட்டுக.

(ஈ) இரு நாடுகளுக்குமிடையில் இரு பண்டங்களையும் பரிமாற்றும்போது அன்னியோன்யமாக நன்மை அடையக்கூடிய பரிமாற்று வீத இடைவெளி யாது? **(02 × 04 புள்ளிகள்)**

(ii) எளிய பாதுகாப்பு வீதம், பெயரளவு பாதுகாப்பு வீதம் எனும் எண்ணக்கருக்களை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iii) பின்வரும் தகவல்கள் சென்மதி நிலுவையில் எக்கணக்கில் வரவு அல்லது செலவு வைக்கப்படும்?

(அ) ஆடை ஏற்றுமதி 150 மி. டொலர்

(ஆ) கணினியும் தொடர்பாடல் சேவைக்காக வெளிநாடுகளுக்கான கொடுப்பனவுகள் 20 மி.டொலர்

(இ) முதலீட்டு வருமானம் பெறுவனவு 50 மி.டொலர்

(ஈ) குடித்தனங்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு மாற்றல் 30 மி. டொலர்

(உ) உள்நாட்டுக் கம்பனியொன்று வெளிநாட்டு கைத்தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தல் - 500 மி. டொலர் **(05 புள்ளிகள்)**

(iv) நிலையான நாணயமாற்று வீதத்தையும் பெயரளவு நாணயமாற்று வீதத்தையும் விளக்குக. **(03 புள்ளிகள்)**

[பக்.5 ஐப் பார்க்க.

The National e-learning Portal for The General Education

**9.** (i) பொருளாதார வளர்ச்சியானது எக்காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது? **(02 புள்ளிகள்)**

(ii) அபிவிருத்தி, மானிட அபிவிருத்தி, நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற எண்ணக்கருக்களை விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iii) இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீழ்ச்சியடைவதற்கு எக்காரணிகள் அடிப்படையாக அமைந்தன? அதன் பொருளாதார விளைவுகளை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(iv) வருமான வறுமையின் உள்ளடக்கத்தை விளக்கி, அதன் அளவீடு என்ன என்பதைக் காட்டுக. **(04 புள்ளிகள்)**

(v) இலங்கையின் தேசிய வறுமை வீதத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் அதில் பிரதேச ரீதியாக துறைரீதியாக ஏற்பட்டுள்ள போக்குகளையும் பரீசீலிக்குக. **(04 புள்ளிகள்)**

**10.** (i) இலங்கையின் சனத்தொகை முதுமையடைதலின் சமூக பொருளாதார பாதிப்புக்களைக் குறிப்பிட்டு அதனைத் தீர்க்க எடுக்கக் கூடிய நடவடிக்கைகளையும் விளக்குக. **(05 புள்ளிகள்)**

(ii) இலங்கையின் முதலீட்டு சூழலில் காணப்படும் தடைகளையும் சந்தர்ப்பங்களையும் விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iii) கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையின் வறிய மக்கள் சார்பாக பொருளாதார விருத்தி ஏற்பட்டுள்ளது என்று கூறுவது எவ்வளவு தூரம் சரியானது என்பதை விமர்சிக்க. **(05 புள்ளிகள்)**

(iv) இலங்கையின் ஊழியம் வெளிநாடுகளுக்கு நகர்வது தொடர்பாக கருத்துத் தெரிவிக்க. **(05 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

* * *